**Starting time 12.30 P.M.**

# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 160/2012**

Deposition of **P.W. -2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 22.08.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : தமிழரசி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>சாட்சிக்கு அழைப்பாணை சார்வாகி ஆஜராகியதன் பேரில், பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகின்றார்</u>: எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் புல எண் 42/12 சம்பந்தப்பட்ட சிட்டடாவின் நகலை சமர்ப்பிக்கும்படி குறிப்பிடப்பட்டிருந்தது என்றால், ஆமாம். அந்த ஆவணத்தை நான் சமர்ப்பித்துள்ளேனா என்றால், இல்லை, எங்களது அலுவலக பதிவறையில் அந்த ஆவணம் இல்லை. சிட்டா பதிவேடு என்பதால் நிலையான பதிவேடு என்பதால் எங்கள் அலுவலகத்தில் அது இருக்கும் என்றாலும், வாதியின் அறிவுறுத்தலின் பேரில் எங்கள் அலுவலக பணியாளர்கள் அந்த பதிவேட்டி மறைத்து வைத்துள்ளார்கள் என்றால், இல்லை. UDR-க்கு முன்பு சர்வே எண் 42/12-ஆனது ஆறுமுக கவுண்டர் மகன் செல்லமுத்து, செல்லமுத்து கவுண்டரின் முதன் மனைவி அல்லியம்மாள், இரண்டாம் மனைவியின் மக்களான சிவபெருமாள், செல்லமுத்து ஆகியோர் பெயரில்தான் இருந்தது என்றாலும், அதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் வாதியின் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் அதை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால், சரியல்ல. புல எண் 42/12 உட்பிரிவு செய்யப்பட்ட போது அதன் விஸ்தீரணம் அளக்கப்பட்டு முட்டுகல் நடப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால், ஆமாம். அந்த நிலத்தை நாங்கள் புல தணிக்கைச் செய்தோமா என்றால், இல்லை. அந்த நிலம் முழுவதும் தற்போதும் சிவபெருமாளின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றாலும், புல தணிக்கைச் செய்யப்படவே இல்லை என்றாலும், சரியல்ல.

2. 21.04.1997 தேதியன்று புல எண் 42/12 ஆனது புல எண்கள் 42/12 ஏ மற்றும் 42/12 பி-

என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட காலத்தில் துணை வட்டாட்சியராக நான் இல்லை என்றால், ஆமாம். வாதி தன்னுடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி புல தணிக்கைச் செய்யப்படாமல் அலுவலகத்திலேயே வைத்து புல எண் 42/12 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால், இல்லை. Ex-X9 சிட்டாவனது சுருட்டையம்மாள் மற்றும் 6 நபர்கள் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த நபர்கள் யார் யார் அவர்கள் எவ்வளவு விஸ்தீரணத்தில் இருக்கிறார்கள் என்பது குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால், ஆமாம். வாதி சுருட்டையம்மாள் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றதாக ஒரு போலி கிரய ஆவணத்தை ஏற்படுத்தி வருவாய்த்துறை ஆவணங்கள் அவரது பெயரில் மாற்றியுள்ளார் என்றால், சரியல்ல. தற்போது வரையிலும் புல எண் 42/12 உட்பிரிவு செய்யப்படாமல் சிவபெருமாள் என்பவர்தான் அனுபவத்தில் இருந்து பயிர் செய்து வருகிறார்கள் என்றால், இல்லை. நான் நேரில் சென்று நிலத்தை ஆய்வு செய்தேனா என்றால், இல்லை, அதனால் யார் நிலத்தில் பயிர் செய்கிறார்கள் என்று நேரடியாக தெரியாது என்றால், ஆமாம். புல எண் 42/12-ல் பிரதிவாதியின் தகப்பனாரின் சமாதியும், உயிர் வேலியும் இருக்கிறது என்றாலும், அது இதுவரையிலும் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றாலும், சரியல்ல. தவறாக எனது அலுவலகத்தில் ஏற்படுத்தப்பப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>வாதி தரப்பில் மறு விசாரணை :</u> UDR-க்கு முன்பாக சிட்டா யார் பெயரில் உள்ளதோ அவர்களது பெயரில்தான் UDR-ன்போது தயாரிக்கப்பட்ட அ பதிவேடு இருக்கும் என்றால், ஆமாம், சில சமயங்களில் மாறியும் வரும். நிலம் யாருடைய சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருக்கிறதோ அவர்களது பெயர்தான் அடங்கலில் வரும் என்றால், ஆமாம்.

<u>பிரதிவாதி தரப்பில் மறு குறுக்கு விசாரணை :</u> உண்மையிலேயே நிலத்தில் யார் அனுபவத்தில் இருக்கிறார்களோ அவர்களது பெயரில்தான் வருவாய்த்துறை ஆவணங்கள் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக UDR திட்டம் வந்தது என்றால், ஆமாம். தவறான பத்திரம் பதிவு செய்யப்பட்டு அது அடங்கலில் வந்திருந்தால் அதே பெயர்தான் UDR-ல் வரும் என்றால், யார் அனுபவத்தில் இருக்கிறார்களோ அவர்களது பெயரில்தான்வரும். வழக்கு சொத்தை பொறுத்த வரையிலும் நான் புல தணிக்கைச் செய்யாததால் யார் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரியல்ல.

Ending time : 12.48 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.